STC.No. 219/2025 PW1.திரு.ராம்குமார்
தேதி– 16.06.2026
எதிரி ஆஜர்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எதிரியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் இரண்டு வருடத்திற்கு மேலாக தெரியும். எதிரிக்கு நான் கந்துவட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் இல்லை.எதிரியிடம் மாதம் அல்லது வார வட்டி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது தொலைபேசி எண் 9150545301 ஆகும். மேற்படி தொலைபேசி எண் தான் எனது ஜி பே கணக்கு உள்ளது என்றால் சரிதான். 2021லிருந்து 2024 வரை தினசரியும் மாதம் 1500 முதல் ரூ.3500 வரை பணம் எதிரி எனது ஜி பே விற்கு அனுப்பி உள்ளார் என்றால் 2023 லிருந்து பணம் அனுப்பினார். காய்கறி வியாபாரம் சம்பந்தமாக அவர் பணம் அனுப்பி உள்ளார்.எதிரி காய்கறி வியாபாரம் செய்கிறார். அவர் சந்தைக்கு செல்லும் பொழுது பணம் இல்லை என்று என்னிடம் கேட்பார். நான் பணம் அனுப்புவேன்.மேற்படி விபரங்களை எனது வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு ரொக்கமாக ஆறு லட்சம் கொடுத்ததாக கூறுகிறேனா என்றால் சரிதான். எதிரி ஜிபே–வில் பணம் அனுப்ப நிறுத்திய பின்பு தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள தொகையை எதிரி நிரப்பினாரா என்றால் சரிதான். எதிரிக்கு நான் வட்டிக்கு கொடுத்ததற்கு ஆதரவாக தான் காசோலை கொடுத்தார் என்றால் சரியல்ல. பூர்த்தி செய்யாமல் கொடுத்த காசோலையை அதிக வட்டிக்காக நான் பூர்த்தி செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.16 19:07:35 +0530
J.M, F.T.C(M.L),Uthamapalayam